இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 14.01.2026


# நேற்றைய மாணவர் சக்தியும் இன்றைய பராசக்தியும்!

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின், 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்', பேரறிஞர் அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்', தமிழினத் தலைவர் கலைஞரின் 'தூக்குமேடை', நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் நாடகங்கள் என தமிழ்நாட்டு மேடைகளில் ஒலிக்கும் போது அவை வசந்தத்தின் இடிமுழக்கமாக இருந்தன. தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் கொள்கைத் தங்கங்களை உருவாக்கியவை, இது போன்ற நாடகங்களும் திரைப்படங்களும்தான்.

பாமர மக்கள் மனதிலும், கல்விச் சாலைக்குள் நுழைய முடியாத சமூகத்துக்கும் சமூகப் பாடத்தை எடுத்தவை இது போன்ற கலைப்படைப்புகள் தான். அதனால்தான் நாடகங்களுக்குத் தடை போடும் சட்டமே வந்தது. திரைப்படங்களுக்கு தணிக்கை நெருக்கடிகள் வந்தன. கலைஞரின் 'பராசக்தி'க்குத் தடை வந்தது. பல நூறு பக்கங்கள் புத்தகம் போடும் அளவுக்கு அன்றைய நெருக்கடிகள் அமைந்திருந்தன. ஆனாலும் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் திராவிட இயக்கம் தனது பரப்புரையை தன் கையில் கிடைத்த அனைத்து வகையிலும் செய்தது.

பழமைவாதங்கள் மண்டிக்கிடந்த கலையை மக்கள் கலையாக மாற்றியது திராவிட இயக்கத்தவரின் கலைப் படைப்புகள்.

இதோ.. இன்று ஒரு 'பராசக்தி' பேரொளி எழுப்பி இருக்கிறது!

**மீண்டும் திரையரங்குகளில் 'தீ பரவி வருகிறது'. வசனத்தால் கொள்கையை விதைத்து, காட்சிகளால் இதயத்தை நனைப்பதாக இருக்கிறது 'பராசக்தி'. இன்றைய இளைய தலைமுறைக்கு, அந்தக் காலத்து மாணவர் சக்தியை, மொழிப் போராட்டத்தை, தமிழுக்காக தியாகம் செய்த வரலாற்றை மனதில் தைக்கும் வகையில் சொல்லி விட்டது இன்றைய 'பராசக்தி'.**

தமிழை, தமிழனை, தமிழ்நாட்டைக் காக்கும் போராட்டமாக இருப்பது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டமே. 'அது மொழிப் போராட்டம் மட்டுமல்ல; நமது பண்பாட்டைக் காக்கும் போராட்டம்' என்றார் தந்தை பெரியார். அவர்தான் 1938 ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். பேரறிஞர் அண்ணா முதன்முதலில் கைதானார். சிறுவனாக இருந்த கலைஞர், தமிழ்க்கொடி தாங்கி திருவாரூர் வீதிகளில் வலம் வந்தார். பெண்களும், குழந்தைகளும் என பல்லாயிரக்கணக்கானவர்கள் கைதானார்கள். ஒன்பது மாதங்கள் சிறையில் இருந்தார் பெரியார். நடராசனும் தாளமுத்துவும் சிறையில் மரணம் அடைந்தார்கள். இரண்டு ஆண்டுகள் கழித்து இந்தித் திணிப்பு கைவிடப்பட்டது.

**1948 ஆம் ஆண்டு மீண்டும் இந்திக்கு எதிரான போராட்டம். தந்தை பெரியாரும் அண்ணாவும் களம் அமைத்துப் போராடினார்கள். அது முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் தமிழ்நாடு இந்தி எழுத்துகளை அழித்துக் களமாடியது. இதன் உச்சகட்டம்தான் 1960களின் தொடக்கக் காலத்தில் உருவான மொழிப்போராட்டம் ஆகும். கலைஞரை மொழிப்போர்த் தளபதியாக தலைமை தாங்கக் கட்டளையிட்டார் அண்ணா. தமிழ்நாடு முழுவதும் 4 ஆயிரம் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். தடையை மீறி தி.மு.க. கூட்டங்கள் நடந்தன. இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு ஒரு மாதம், இருமாதம் சிறைத் தண்டனை பெற்றனர். இந்த உணர்ச்சித் தீ தான் 1965 மொழிப் போராட்டமாக வெடித்தது.**

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு முனையில் போராடியது. மாணவச் சமுதாயம் இன்னொரு முனையில் நின்று போராடியது. மாணவச் சமுதாயம் என்றால் அதிலும் இருந்தவர்கள் பெரும்பாலும் தி.மு.க. மாணவர்கள் தான். 1,569 தி.மு.க. தொண்டர்கள் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார்கள். ஒன்பது பேர் தீக்குளித்து தங்கள் உயிரைக் கொடுத்தார்கள். தமிழ்நாடே எரிந்தது. போராட்டத்தை அடக்க ராணுவம் வரவழைக்கப்பட்டது. மாணவர் போராட்டத்தைத் தூண்டியதாக கலைஞர் அவர்கள் தேசப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் வைக்கப்பட்டார். 'முரசொலி' நாளிதழ் கடுமையான தணிக்கைக்கு உள்ளானது. 'முரசொலி' மாறன் கைது செய்யப்பட்டார். அன்றைய மாணவச் சமுதாயத்தின் போர் முழக்கமாக 'முரசொலி' இருந்தது. இரத்தத்தில் தோய்ந்த ஐம்பது நாட்களாக 1965 ஜனவரி - பிப்ரவரி - மார்ச் மாதங்கள் இருந்தன.

**இந்த அரசியல் எழுச்சியின் மாபெரும் வடிவமாக 1967 சட்டமன்றத் தேர்தல் அமைந்தது. பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தது. இந்திக்கு இங்கு இடமில்லை, தமிழும் ஆங்கிலமுமே தமிழ்நாட்டில் இனி இருக்கும் என்று மாணவர் எண்ணத்தை மக்கள் எண்ணத்தைச் சட்டம் ஆக்கினார் பேரறிஞர் அண்ணா.**

இந்த வரலாற்றைத் துணிந்து சொல்கிறது 'பராசக்தி' திரைப்படம். கொள்கை வரலாற்றை, கொள்கைக்காக உயிர் கொடுத்த வீரக் காவியத்தை, மாணவர்களின் தன்னலமற்ற வீரத்தை, மாணவச் சமுதாயத்தைக் காக்கும் அரணாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியதை மனக்கண் முன் கொண்டு வந்து காட்டுகிறது 'பராசக்தி'.

'தமிழ் வாழ்க' என்று முழக்கமிட்டபடி திரையரங்குகளை விட்டு வெளியில் வர வைத்துள்ளது இந்தப் படம்.

**ஒரு கல்லூரி மாணவர் சொல்கிறார், 'தமிழைக் காக்க இவ்வளவு தியாகம் செய்துள்ளோம் என்பதைத் தெரிந்து கொண்டோம்' என்கிறார். ஒரு மாணவி, 'இப்போதும் இதுபோல போராடத்தான் வேண்டி இருக்கிறது' என்கிறார். 'பராசக்தி' பொழுது போக்குப் படமல்ல; கொள்கையை விதைக்கும் படம் என்பதற்கு இந்த இருவர் வாக்குமூலம்தான் எடுத்துக்காட்டுகள் ஆகும்.**

**புதிய தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரால் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்கிறது இன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதனை ஏற்க மறுத்ததால் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுக்கு விரோதமாக ரூ.2 ஆயிரம் கோடி பணத்தை தர மறுக்கிறது. சில கோச்சிங் சென்டர் நிறுவனங்கள் உண்டு, கொழுக்க உருவாக்கப்பட்ட 'நீட்' தேர்வானது, மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்து வருகிறது. வடக்கில் இருந்த பல்வேறு மொழிகளை காவு வாங்கி விட்ட இந்தி, தெற்கிலும் அதே வேலையைக் காட்டி வருகிறது. நேர்முகத் தேர்வுகளில் இந்தி பேசாத மாணவர்கள் அடையும் அவமானம் சொல்லிமாளாது.**

வட மாநிலக் கட்சியான பா.ஜ.க., இந்திக் கட்சியாக காட்சி அளிப்பதையே தனது அடையாளமாக நினைக்கிறது. வகுப்புவாதத்துக்கு அடுத்ததாக இந்தி ஆதிக்கமே பா.ஜ.க. மீதான கடுமையான விமர்சனங்களுக்கு காரணமாக இருக்கிறது. இதை எதிர்த்து தமிழ்நாடு போராடும் நேரத்தில் 'பராசக்தி' வெளியாகி இருக்கிறது.

**தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்!**

**வெல்வோம் ஒன்றாக!**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (12.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழாவில், அயல்நாடுகளில் மாணவர்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பு நகர்வு (Mobility of Students for Education and Employment to Foreign Countries), மனிதவள மேம்பாட்டு சான்றிதழ் உறுதிப்படுத்தல் (HRD Attestation), மொழி பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் பணியமர்த்தல் சேவைகள் வழங்குவதற்காக OMCL மற்றும் வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (VIT) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழாவில், டாக்டர் அண்ணாமலைக்கு தமிழ் மாமணி விருதினையும், டாக்டர் முகமது ஹனிபா பின் அப்துல்லாவுக்கு கல்வித் துறையில் சிறந்து விளங்கும் தமிழர்களுக்கான கணியன் பூங்குன்றனார் விருதினையும், சரவணன் பத்மநாதன் மற்றும் செந்தில்குமார் இராமலிங்கம் ஆகியோருக்கு சமூக மேம்பாட்டுப் பிரிவுக்கான கணியன் பூங்குன்றனார் விருதுகளையும், திருமதி கோகிலவாணி பிரகாஷ்தேவனுக்கு மகளிர் பிரிவுக்கான கணியன் பூங்குன்றனார் விருதினையும், டாக்டர் அன்சாரி வாகித்துக்கு வணிகப் பிரிவுக்கான கணியன் பூங்குன்றனார் விருதினையும், பேராசிரியர் திருமலைசாமி வேலவனுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவுக்கான கணியன் பூங்குன்றனார் விருதினையும், மரு. கபிலன் தர்மராஜனுக்கு மருத்துவப் பிரிவுக்கான கணியன் பூங்குன்றனார் விருதினையும், வேர்களைத் தேடி திட்டம் மூலம் தமிழ் நாகரிகம், கலாச்சாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை அயலகத்தில் வாழும் தமிழருக்கு கொண்டு செல்லும் பணியை சிறப்பாக ஆற்றி வரும் திருமதி தீபா ராணி (அ) சாவ்ஷூ தூசார்க்கு சிறந்த பண்பாட்டுத் தூதுவர் (வேர்களைத் தேடி) விருதினையும் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், அமைச்சர் எஸ்.எம்.நாசர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# போக்குவரத்துத்துறை ஊழியர்களுக்கு நெகிழ்ச்சிபட நன்றி - பாராட்டு!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பெருமிதம்!

அரியலூர், ஜன. 14 –

அரியலூர், குன்னம், பெரம்பலூர்,ஜெயங்கொண்டம் போக்குவரத்து பணிமனையில் போக்குவரத்து துறை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பொங்கல் விழாவில் பங்கேற்ற போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர். பின்னர் ஊழியர்கள் அனைவருக்கும் பொங்கல் வழங்கியும், புத்தாடைகள் வழங்கியும் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இதனையடுத்து கூடியிருந்த போக்குவரத்துத் துறை ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்,

போக்குவரத்துத்துறை சார்பாக அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள பணிமனைகளில் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளோம். ஒருபுறம் பொங்கல் விழா, இன்னொரு புறம் தேர்தல் நெருங்குகின்ற நேரம் இது. நான்கு ஆண்டுகள் போக்குவரத்து துறை அமைச்சராக முதலமைச்சர் எனக்கு தந்த இந்த வாய்ப்பை சிறப்பாக செயல்படுத்த முதல் காரணம், போக்குவரத்துத் துறை ஊழியர்கள் எனக்கு கொடுத்த ஒத்துழைப்பு தான்.

ஒரு சிறு குறை கூட இல்லாமல் போக்குவரத்து துறை ஊழியர்கள் சிறப்பாக பணியாற்றுகிறீர்கள். அதற்காக தொ.மு.ச. மட்டுமல்ல, அனைத்து சங்கங்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு இந்த பொங்கல் விழாவை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்ற பிறகு, இந்த துறை நல்ல நிலைக்கு வந்துள்ளது. 7000 புதிய பேருந்துகள் மக்கள் சேவைக்கு வந்துள்ளது. புதிதாக ஊழியர்கள் 3500 பேரை பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்து துறையில் ஊதிய உயர்வு மிக சுமூகமாக பேசி முடிக்கப்பட்டுள்ளது.



ஒரு பேச்சுவார்த்தை கூட முடிக்க முடியாத நிலை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது. தற்போது இரண்டு பேச்சுவார்த்தை முடிக்கப்பட்டு, ஊழியர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான், இந்த துறையே உருவாக்கப்பட்டது. போக்குவரத்து துறை என்ற ஒரு துறையே முதன் முதலில் அரசு வசம் வந்தது தமிழ்நாட்டில் மட்டும் தான் அதுவும் கலைஞர் தான். இன்றும் இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலமாக போக்குவரத்து துறை திகழ்ந்து கொண்டிருக்கிறது.

40 நாடாளுமன்ற தொகுதிகளைக் கொண்டது, நம்முடைய தமிழ்நாடு. நம்மிடம் 20000 அரசு பேருந்துகள் உள்ளது. நம்மை விட இரண்டு மடங்கு அதிகமாக 80 நாடாளுமன்ற தொகுதிகளை கொண்ட உத்தரப்பிரதேசத்தில், வெறும் 7000 பேருந்து தான் உள்ளது. நாம் மற்றவர்களை விட எவ்வளவு முன்னேறி இருக்கிறோம் என்பதை இதன் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்தியாவிலேயே ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர், ஊழியர்களாக உள்ள மாநிலம் தமிழ்நாடு தான். இதில் பணியாற்றுபவர்களுக்கு நல்ல சம்பளம், பென்ஷன் தந்தவர் கலைஞர். எல்லாவிதமான வரலாற்றையும் அவர் தான் உருவாக்கினார். இடையில் வந்த பிரச்சனைகள் எல்லாம், தற்பொழுது சீரமைக்கப்பட்டு பே மெட்ரிக் முறையில் தற்போது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டு பேச்சு வார்த்தைகள் மூலம் 5% சதவீதம் மற்றும் 6% என ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு தற்போது நல்ல சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்து துறையில் எதையெல்லாம் செயல்படுத்த முடியாது என மற்றவர்கள் நினைத்தார்களோ, இன்று அதையெல் லாம் செயல்படுத்தும் விதமாக மின்சார பேருந்துகள், புதிய வால்வோ பேருந்துகளை பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளோம்.

இதுவரை ஆம்னி பேருந்துகளில் மட்டுமே முன்பதிவு செய்து பயணித்து வந்த நிலையை மாற்றி, அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிக்கும் வரலாறு உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் பேர் கூடுதலாக, முன்பதிவு செய்து பயணிக்கும் நிலை உருவாகியுள்ளது. இன்று நவீன மாற்றங்களைப் பெற்று வரவேற்கத்தக்க துறையாக போக்குவரத்து துறை செயல்பட காரணமே, இந்த துறையில் பணியாற்றும் ஊழியர்களான நீங்கள்தான்.

தீபாவளியோ, பொங்கலோ எதுவானாலும் நான் மாவட்ட வாரியாக சுற்றி ஆய்வில் ஈடுபடும் போது, எங்கு சென்றாலும் துறையில் உள்ள அனைத்து நிலை ஊழியர்களும் களத்தில் நின்று மக்களுக்காக சேவையாற்றும் காட்சியை பார்க்க முடிகிறது.

கேரளாவில் இரவு 10 மணிக்கு பஸ் ஸ்டாண்டையே இழுத்துப் பூட்டி செல்லும் நிலை உள்ளது. ஆந்திரா, கர்நாடகாவில் தொலை தூர பேருந்து சேவை மட்டும்தான் இயங்கும். நம்முடைய மாநிலத்தில் மட்டுமே, இரவு நேரத்தில் கிராமங்களுக்கு சேவை செய்யும் துறையாக போக்குவரத்து துறை இருக்கிறது. அந்த பெருமையும் ஊழியர்களையே சாரும். இதை சட்டமன்றத்திலேயே நான் பதிவு செய்திருக்கிறேன்.

நம்முடைய மக்கள் தீபாவளி, பொங்கலை சிறப்பாக கொண்டாடுகிறார்கள் எனில், ஊழியர்களான நீங்கள் விழா காலத்தில் குடும்பங்களை விடுத்து போக்குவரத்து சேவை செய்வதால் தான் மக்களால் விழாக்களை கொண்டாட முடிகிறது. இப்படி ஒரு மகத்தான சேவையை வழங்கும் ஊழியர்களுக்கு நன்றி கூறுகின்ற விதமாகத்தான், இந்த பொங்கல் விழாவை பயன்படுத்திக் கொள்கிறேன்.

இந்தப் பொங்கல் இனிய பொங்கலாக சமத்துவப் பொங்கல் ஆக உங்களின் வாழ்விலே மகிழ்ச்சி பொங்கும் பொங்கலாக மாறிட எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மகிழ்ச்சியுடன் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் சதீஷ்குமார், துணை மேலாளர்கள் புகழேந்தி ராஜ், ராஜேந்திரன், ராம்குமார், கிளை மேலாளர் குணசேகர், பொதுச் செயலாளர் குணசேகரன்,

ஒன்றியப் பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், கோ.அறிவழகன், தெய்வ.இளையராஜா, நகரச் செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி, இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், திருச்சி மண்டலத் தலைவர் டி.சேகர், அரியலூர் போக்குவரத்து தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன், ஜெயங்கொண்டம் தொ.மு.ச. தலைவர் கொளஞ்சி, தொ.மு.ச. நிர்வாகிகள் செல்வம், சுப்ரமணியன், ஜெய்சங்கர் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள், அனைத்துச் சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




தருமபுரி கிழக்கு மாவட்டம், அரூர் அரசு கலைகல்லூரியில் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் மூலம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார். உடன் நகரச் செயலாளர் முல்லை ரவி, அரூர் நகர் மன்றத் தலைவர் இந்திராணி தனபால், ராஜேந்திரன், சூர்யா தனபால் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.